# 'இந்து' ஏடு 3 நாள் தடுத்து வைக்கப்பட்டது'

விமான மூலம் கொழும்புக்கு அனுப்பப்பட்ட 10-2-75ந் திகதிய 'சென்னை இந்து' பத்திரிகைப்பொதி மூன்று நாட்களாக கொழும்பு சுங்கப் பகுதியில் தடுத்துவைக்கப்பட்ட பின்னரே வெளியே விடப்பட்டதாம்.

இதற்குக் காரணம் அதில் எழுதப்பட்டிருந்த ஓர் ஆசிரியத் தலையங்கம்தான். அவ்வாசிரியத் தலையங்கத்தின் சில பகுதிகள் இலங்கைத் தமிழர்களுக்கு சார்பாக காங்கேசன்துறை வெற்றி குறித்து எழுதப்பட்டிருந்ததனாலேயே இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டதாகத் தெரிகிறது.

அத் தலையங்கத்தை தணிக்கை அதிகாரிகள் படித்து அங்கீகரித்த பின்னரே, குறித்த இந்துப் பத்திரிகையைகொண்ட பொதி வெளியே அனுமதிக்கப்பட்டதாம்! 'இந்து' ஏட்டின் அத் தலையங்கத்தின் பிரசுரிக்குரிய பகுதி அடுத்த வார சுதந்திரனில் இடம் பெறும்.

### ஆபீஸ் பையனின் கேள்வி!

''வீடு கட்டுவதற்கு புதிய கடன் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாதென தேசிய வீடமைப்பு திணைக்களத்தின் யாழ்ப்பாண அலுவலகம் அறிவித்துள்ளதாம்! ஓ... அதுதான் காங்கேசன்துறை இடைத்தேர்தலும் முடிஞ்சு போச்சே! இனி ஒருவேளை அடுத்த தேர்தல் வரும்போதுதான் மீண்டும் 'லோன்' குடுப்பினமோ?'' என்று கேட்கிறான் நம் ஆபீஸ் பையன்!

## சுதந்திரன் அன்று சொன்னதை மாணவர்கள் இன்று சொல்கிறார்கள்

''பெயரளவில் மட்டுமே யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வளாகம் என்று இருக்கிறதேயொழிய அதன் தரம் மகா வித்தியாலயத்தையும் விட கேவலமாக இருக்கிறது!''

இவ்வாறு யாழ் வளாகத்தைச் சேர்ந்த 85 மாணவர்கள் கையெழுத்திட்டு வளாகத் தலைவருக்கு கையளித்துள்ள மகஜர் ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருப்பதாக வீரகேசரி (16-2-75) செய்தி கூறுகிறது.

இந்த வளாகம் தொடங்கப்பட்டபோதே சுதந்திரன் கூறியது — யாழ் வளாகம் தமிழரை ஏமாற்றும் வெறும் கண்துடைப்பு என்று கூறினோம். நாம் அன்று கூறியதை மாணவ சமுதாயம் இன்று உணர்ந்து குரல் கொடுக்கத் தொடங்கியிருக்கிறது. மாணவர்களின் உரிமைக்குரலுக்கு சுதந்திரன் எப்பொழுதும் பக்கபலமாக இருக்கும்!


# சுதந்திரன்

SUTANTIRAN

தொலைபேசி 23411, விலை: சதம் 60

வள்ளுவர் ஆண்டு 2005, மாசி 11, பெப்ர 11 (23-2-75) ஞாயிறு புத்தகம் 28, இதழ் 38




அண்மையில் சென்னை பெரியார் திடலில் உலகத் தமிழ் இளைஞர் பேரவைத் தலைவர் டாக்டர் இரா. சனார்த்தனம் எம். ஏ. அவர்கட்கும், டாக்டர் தா. லலிதகுமாரி அவர்கட்கும் தமிழக முதலவர் டாக்டர் கலைஞர் கருணாநிதி அவர்கள் திருமணத்தை நடத்திவைக்கும் மகிழ்ச்சிகரமான காட்சி இது. கலைஞருக்கும் சனார்த்தனத்துக்குமிடையே காணப்படுபவர்தான் முரசொலி அடியார். (உள்ளே 4ம், 5ம் பக்கங்களில் திருமணச் சிறப்பு செய்திகள், படங்களைக் காணலாம்.)

● ஏழைய தமிழ் இளைஞர்களை விடுதலை செய்யாவிடின்

# ஐ. நா. சபை முன் கண்டன ஊர்வலம்!

## நியூயார்க் தமிழர்கள் முடிவு!

தமிழ் ஈழ விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டதற்காக நீதி விசாரணை ஏதுமின்றி சிறையில் வாடும் எஞ்சிய தமிழ் இளைஞர்களையும் உடனடியாக இலங்கை அரசு விடுதலை செய்யவேண்டும் என்றும் — இன்றேல் சிறையிருக்கும் தமிழ் இளைஞர் பிரச்சினையில் இலங்கை அரசு கடைப்பிடித்துவரும் மனிதாபிமானமற்ற இனப்பாரபட்சக் கொள்கையை உலக நாடுகளின் கவனத்துக்கு கொண்டு வரும் நோக்குடன் ஐக்கிய நாடுகள் சபையின் தலைமைச்செயலகத்தின் முன்னர் மாபெரும் கண்டன ஊர்வலத்தை நடத்துவதென்றும் நியூயார்க் தமிழர்கள் தீர்மானித்துள்ளனர்!

—8-ம் பக்கம் பார்க்க

# மானம் காத்தனர் மகாஜனா மாணவர்கள்!

உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தனுக்கு, தெல்லிப்பழை மகாஜனா கல்லூரியில் வரவேற்பு ஒன்றை அளிக்கவிருந்த அக் கல்லூரி மாணவ மாணவியர் — கடைசி நேரத்தில் தமிழ்த் துரோகிகளின் சதி முயற்சியால் அது தடைசெய்யப்பட்டதைக் கண்டு கொதித்தெழுந்து, உடனடியாகக் கல்லூரியை விட்டு வெளியேறி தாம் திட்டமிட்டபடியே கல்லூரிக்கு வெளியே கவிஞருக்கு வரவேற்பு விழாவை நடத்தி முடித்து, தமிழ்த்துரோகிகளின் முகத்தில் கரி பூசி தமிழ் மானம் காத்தனர். இந்நிகழ்ச்சி 14-2-75ல் நடைபெற்றது.

இரண்டரை ஆண்டுகள் சிறையிருந்துவிட்டு விடுதலையான தியாகவீரரான கவிஞரை தங்கள் கல்லூரியில் வரவேற்று உபசரிக்க மகாஜனக் கல்லூரி உயர்தர மாணவர் மன்றத்தினர் தீர்மானித்திருந்தனர். இதுபற்றி கல்லூரி அதிபருடனும் மாணவர்கள் பேசி அதற்கான அனுமதியையும் பெற்றிருந்தனர். 14-2-75ல் கவிஞருக்கு வரவேற்பு அளிப்பதென திகதியும் நிர்ணயிக்கப்பட்டிருந்தது.

கவிஞர் கல்லூரியில் வரவேற்கப்பட விருப்பதை அறிந்த தமிழ்த் துரோகிகளான மேற்படி கல்லூரியைச்சேர்ந்த இரு ஆசிரியர்கள் வெலவெலத்து நடுங்கினராம். சிங்கம் வருகிறதென்று கேள்வியுற்றதுடன் கிடுகிடுத்த இந்த சிறு நரிகள் இரண்டும் வடமாநில கல்வி அதிகாரியுடன் தொடர்புகொண்டு கூட்டத்தை நிறுத்த எடுத்த

—8-ம் பக்கம் பார்க்க


### வாசித்து விட்டீர்களா?

சுதந்திரன் ஆசிரியர் கோவை மகேசன் எழுதிய-

துரோகிகளே தூரவிலகுங்கள்!

விலை ரூபா 2.50

(தனிப் பிரதி தபால் செலவுடன் ரூ. 3.10)

சுதந்திரன் வெளியீட்டகம், 194,ஏ. பண்டாரநாயக வீதி கொழும்பு-12.


உயர் கல்வித்துறையில் தமிழ் பேசும் மாணவர்

## ஒதுக்கப்பட்டுள்ளவிதம் பாரீர்!

பல்கலைக்கழக அனுமதி விபரம் — 1974

| மொத்தத் தொகை | சிங்களவர் | தமிழர் | முஸ்லிம் |
|---|---|---|---|
| 3518 | 2865 (81.9%) | 520 (14.2%) | 122 (3%) |

பல்கலைக்கழக அனுமதி — 1975

| மொத்தத் தொகை | சிங்களவர் | தமிழர் | முஸ்லிம் |
|---|---|---|---|
| 3518 | 2567 | 392 | 111 |

ஒவ்வொரு துறைக்கும் இந்த ஆண்டு எடுக்கப்பட்ட மாணவர் விபரம்:—

| துறை | சிங்களவர் | தமிழர் | முஸ்லிம் |
|---|---|---|---|
| உயிரியல் விஞ்ஞானம் | 450 | 84 | 12 |
| பௌ. விஞ். பொறியியல் | 590 | 97 | 19 |
| கலைப்பிரிவு | 1810 | 211 | 80 |

O மேற்கண்ட புள்ளி விபரம் கல்வியமைச்சு வெளியிட்ட அறிக்கையொன்றில் காணப்படுகிறது (ஆதாரம் 20—2—75 சிலோன் டெயிலி நியூஸ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் ஈழத்தில் மற்றோர் இடைத்தேர்தலை உருவாக்குவது அவசியமற்றது!

## காங்கேசன் மக்கள் தீர்ப்பில் நமக்கே சந்தேகம் ஏற்படலாமா?

காங்கேசன் துறையில் நடைபெற்ற இடைத்தேர்தலில் அமோகமான வாக்குகளை தமிழர் கூட்டணித் தலைவர் செல்வாவிற்கு அளித்ததன் மூலம் குடியரசு அரசியல் சட்டத்தைக் மக்கள் நிராகரித்திருக்கிறார்கள். மூர்த்தண்ணியமாக எதிர்க்கிறார்கள் என்பது தெட்டத்தெளிவாக நிரூபணமாகியிருக்கின்றது.

இந்த மகத்தான வெற்றியினை ஒரு சாதாரண நிகழ்ச்சியாக்கிவிடச் சிலர் நினைக்கிறார்கள். அவர்கள் கூற்று தவறானது என்பதுடன் இதே கொள்கையை வைத்தோ, அன்றி வேறெதும் காரணத்தினை இட்டோ இனிதும் ஒரு தமிழர் கூட்டணி எம். பி. பதவி விலகவோ, போட்டிபோட வேண்டிய அவசியமோ இல்லை என்பதனை எடுத்துக் கூறவே இதனை வரையலானேன்.

இடைத் தேர்தலில் போட்டியிட்ட அபேட்சகர்களினால் முன்வைக்கப்பட்ட கொள்கைகள் என்ன?

அரசியல் சட்டத்தை நிராகரியுங்கள், தமிழ் ஈழம் அமைப்பதற்கான கட்டளையை இடுங்கள் என்பதே தலைவர் செல்வாவின் கொள்கை. அதே கொள்கைகளை நிராகரியுங்கள் என்று கம்யூனிஸ்ட் கட்சி அபேட்சகர் மக்களை கேட்கவில்லை. அதற்குச் சவாலாகப் போட்டியிடுவதாகக்கூட அவர் அறிக்கை விடவில்லை.

மாறாக மாணிக்கவாசகரின் ... பற்றி அவர் பேசி மக்களை மயக்கலாமென்று ... சாயமானவர் பேச்சிலும் ... செய்தார்கள். அதுவும் கட்டுப்படுத்தும் கிடைக்க வாக்குகள் தமிழ்ப் பிரதேசங்களுக்கு வழங்குவதையே வற்புறுத்தி நின்றன என்பதல்லவோ, அவரைச் சார்ந்தோரோ மறுக்கமுடியாது என்பது தெட்டத்தெளிவானதாகும்.

அதுமல்லாமல் குடியரசு அரசியல் சட்டம் தமிழ் மக்களுக்கு முழு உரிமைகளையும் வழங்கிவிட்டது என்று சொல்லமாட்டேன் என்று அமைச்சர்களே வெளிப்படையாக பேசியுள்ளது தலைவர் செல்வாவின்கொள்கைகளையே வலுப்படுத்துகின்றது. ஆகவே பெறப்பட்ட வெற்றி மக்களின் வெற்றி, அதனைத்தோல்வி போலச்சிலர் காட்ட முனைந்தால் அவர்கள் மீசையில் மண்படவில்லை என்று கூறுவது போலாகும். அதைப் பற்றியாம் சட்டைசெய்யத் தேவையில்லை.

ஆனால் மக்கள் அளித்த தீர்ப்பின் மேல் எமக்கே சந்தேகம் ஏற்படுமானால் அதனைவிடத் துரோகம் வேறில்லை. ஆகவே அதே கொள்கையின் மீதோ, அன்றி அதன் சார்பாகவோ இனித் தேர்தல்கள் அவசியமானதல்ல. அப்படிப்பட்ட தேர்தல்களைத் தோற்றுவிப்பதானது மக்களுடைய போராட்டத்தினை திசை திருப்பிடவே உதவும் என்பதோடு, போராட்டத்தில் ஒரு தேக்கநிலையே ஏற்படும். தேர்தல்களால் மட்டும் எமது கோரிக்கைகளை வென்றெடுக்க முடியுமென்று யாராவது நம்பினால் அது நமக்கு நாசத்தையே விளைக்கும்.

ஆகவே இதே நோக்கோடோ, அன்றி இதனைப் போன்றதோர் கோரிக்கையின் மீதோ ஏற்கனவே தெட்டத்தெளிவாக மக்கள் தீர்ப்பளித்த பின்னர் கூட்டணி எம். பி. ஒருவர் பதவி துறக்கவோ, போட்டியிடவோ அவசியம் இல்லை. அத்தோடு அது அனாவசியமான செலவுகளையே மக்களுக்குக் கொடுக்கும்.

ஆதலால் இந்த மாதிரி ஒரு தீர்மானத்தை தமிழர் கூட்டணி தீர்மானிக்கும் போது அதுபற்றி போதிய ஆலோசனை செய்யவேண்டும் என வேண்டுகிறேன்.

—வாணிதாசன்
35, புதுச்செட்டித்தெரு
கொழும்பு-13

## பெரியவர் ஈட்டிய வெற்றி தமிழுரிமைப்போரின் வெற்றி!

திரு. கோவை மகேசன்,
சுதந்திரன்,—கொழும்பு.

அன்பிற்கினியீர்,

வணக்கம்; நலம். இனிய பெரிய வெற்றிச் செய்தியை தந்த நமது காங்கேசன் துறைத் தொகுதித் தமிழ் மக்களுக்கு எங்கள் முதல் வாழ்த்து; பாராட்டு.

பெரியவரின் வெற்றி ஏற்கெனவே எல்லோருடைய நெஞ்சிலும் எழுதப்பட்டுத்தான் இருந்தது. காங்கேசன்துறை மூலம் தமிழர்கள் அதைத் தமிழர் உரிமைப் போரின் வெற்றியாக வரலாற்றில் செதுக்கிவிட்டார்கள்.

அரசும், அதனைச்சார்ந்தோரும் இனிமேலாவது உண்மையை உணர்ந்து தங்கள் வழியை சரிசெய்து கொள்ளவேண்டும். குடியாட்சி முறையில் மக்கள் இதைவிட தெளிவாகவும், திட்டவட்டமாகவும் தங்கள் கருத்தை வலியுறுத்த முடியாது. இப்போது ஆட்சிப் பூனைகள் கண்ணை மூடிக்கொண்டேயிருந்தால், அதனால் தமிழரின் உரிமை உலகுக்கு என்றும் இருட்டாகவே இருந்துவிடப்போவதில்லை.

பெரியவரை எதிர்த்து—தமிழர் உரிமையையே எதிர்த்து—போட்டியிடவும் அங்கே ஒருவர் இருந்தாரே என்பதுதான் பெரியபகிடி. இங்கேயும் அப்படித்தான் "பஞ்சர்" ஆகிப்போன பழைய கம்யூனிஸ்டுகள் இதுபோன்ற பிழைகளை புரிந்து வருகிறார்கள். மக்களின் ஒருமித்த உணர்ச்சியை மதிப்பிட்டு மதிக்கத் தெரியாத முற்போக்கு என்ன முற்போக்கோ?

—டாக்டர் சால்ஸ் இராசநிலையன்,
டாக்டர் சாலினி இராசநிலையன்.

தில்லிப் பல்கலைக்கழகம்,
புதுதில்லி, 8-2-75.

## இஸ்லாமியத் தமிழர்களுக்காகவும் போராடுவது தமிழரசுக்கட்சியே!

—டாக்டர் உதுமா லெவ்வை

மூதறிஞர் தந்தைசெல்வாவின் மாபெரும் வெற்றி கண்டு மகிழ்ச்சியடையும் அதே வேளையில்தமிழ்பேசும் இனத்தின் விடுதலை உறுதியாகி விட்டமை கண்டு இதயம் பூரிக்கின்றேன். தன்மானமுள்ள தமிழ்பேசும் இனம் தன்னுரிமைகளை பெறுவதற்கும் உயரிய இனிய தமிழ்மொழி அரசோச்சுவதற்குமாக கடந்த கால் நூற்றாண்டு காலமாக அரும்பாடுபட்டு வரும் இ. த. அ. கட்சியின் கொள்கைகளை மட்டந்தட்டிவந்த சிங்கள ஆளியாளர் பிடி அரிசிக்கு வழியற்ற ஓர் குடியரசைத் தோற்றுவித்து அதன் மூலம் தமிழ்பேசும் மக்கள் அனுபவிக்கக் கூடியதாயிருந்த அற்ப உரிமைகளையும் மறுத்தனர்.

மேற்படி குடியரசின்சட்டதிட்டத்தை தமிழ் பேசும் மக்கள் ஏற்கவில்லை என்பதை அரசுக்கு நிரூபிப்பதற்காக தந்தையவர்கள் காங்கேசன்துறையில் ஏற்படுத்திய உபதேர்தல் மூலம் தமிழ் மக்கள் தங்கள் தன்மான உணர்வையும் தனிநாடு கோரும் வேட்கையையும் நிரூபித்துவிட்டார்கள். அதற்காக காங்கேசன் துறை மக்களை மனதாரப்பாராட்டுகின்றேன்.

இந்நிலையில் தமிழ்பேசும் மக்களின் ஓரங்கமாகவிருக்கும் முஸ்லிம் பெருங்குடி மக்கள் தங்களின் நிலை பற்றியும் சிந்தித்தல் தங்கள் தலையாயகடனாகும்.

கடந்த 25 வருடகாலமாக முஸ்லிங்கள் தங்கள் ஆதரவை தமிழரசுக்கட்சிக்கு வழங்கியபோதும், வழங்காதபோதும் தமிழ்பேசும் மக்கள் என்றமுறையில் முஸ்லிம் மக்களின் உரிமைக்காகவும் தமிழரசுக்கட்சி பாடுபட்டு வந்திருக்கின்றது என்ற உண்மையை முஸ்லிம்கள் மறந்துவிடக்கூடாது.

முஸ்லிம் மக்களுக்கு சிங்கள ஆட்சியில் வழங்கப்பட்டுள்ள இடம் எது என்பதனை அம்பாறை மலியங்கனை, பாணந்துறை, நெரமுல்லை ஆகிய இடங்களிலே நடைபெற்ற சம்பவங்களும், கல்முனையில் பௌத்தர்கள் சிலை கட்டுவதற்கு முஸ்லிம்களை நிர்ப்பந்தித்து சிங்களப்போலிசாரால் பணம் பறிக்கப்பட்டு வருவதும் பணங்கொடுக்க மறுப்போர் அதே போலிசாரால் கடுமையாகத் தாக்கப்பட்டு வருவதுமான நிகழ்ச்சிகள் உணர்த்தியிருக்குமென நம்புகின்றேன்.

இந்த நிலையின் அடக்குமுறைக்கோட்டைக்குள் அச்சமென்னும் காற்றைச் சுவாசித்துக்கொண்டு எத்தனை காலம் வாழலாம் என்பதை உணர்ந்து, தமிழரசுக் கட்சி வெள்ளிவிழாக் கொண்டாடும் இக்காலகட்டத்தில், தமிழ் பேசுமினம் சிங்களச் சிறுமதியர்கள் இயற்றிய அரசியலமைப்புச் சாசனத்தைத் தமிழ்ப்பகுதிகளிலே செல்லாக் காசாக்கி தந்தை அவர்களை வெற்றிபெறச் செய்து வெற்றி விழாக் கொண்டாடும் இக்காலகட்டத்தில் இந்துக்களும், இஸ்லாமியரும் கிறிஸ்தவரும் சமாதானமாக வாழக்கூடியதும் தமிழ்மொழி ஆட்சி நடத்தக்கூடியதுமான ஓர் தனித்தமிழ் நாடுகோரும் கொள்கைக்கு முஸ்லிம் மக்களும் தங்கள் முழு ஆதரவையும் வழங்குவதுடன் உள்ளன்பும் உறுதியும் கொண்டு உழைத்து வெற்றி பெற திடசங்கற்பம் கொள்வோமாக.

MATRIMONIAL

Wanted Tamil Christian bride for Ceylon Tamil mechanical engineer in U. K. civil service. Bridegroom is young, handsome and friendly, resident in London, comes from well known Jaffna family. Write in confidence to bridegroom's sister

Mrs. PILLAI,
277, West End Lane,
LONDON N. W. 6. (England.)

## பண்டாரவளை தமிழர் பண்பாட்டுக் கழகம் வாழ்த்துகிறது

பண்டாரவளை தமிழர் பண்பாட்டுக் கழகம் பின்வரும் செய்தியை சுதந்திரனுக்கு அனுப்பியுள்ளது:-

எமது கழகம் அரசியல் கலப்பற்ற—கட்சிபேதமற்ற ஓர் இயக்கம். என்றாலும் தமிழ் வளர்க்கும் நற்பணியில்—தமிழுரிமை காத்திடும் நற்பணியில் தன்னை ஈடுபடுத்திக்கொண்ட எவருக்கும் தன்னால் இயன்றதைச் செய்தல் வேண்டும் என்பது இது கொண்டுள்ள கொள்கைகளுள் ஒன்று ... [illegible]

... தேர்தல் புலம் புகுந்தார். உலகும் அதன் விளைவை கவனமாகப் பார்த்து நின்றது. இங்குள்ள தமிழர்கள் அரசியல் உரிமைகள் மறுக்கப்பட்ட நிலையிலும் — இனபேதத்தால் பிரிக்கப்பட்ட நிலையிலும் உள்ளனர். இதைத் தமிழ்த் தலைவர்கள் சொல்லுங்காலை சிங்களத் தலைவர்களும் "ஆமாம் உங்களுக்கு குறைகள் உண்டுதான்" என ஏற்றுக்கொள்கின்றனர். இந்நிலையில் தந்தை செல்வா அவர்கள் போட்டியின்றியே தெரிவு செய்யப்பட்டிருக்க வேண்டியவர். அதற்குவழி சமைத்திட தம்மால் முடியவில்லை, என்றாலும் அவர் பெற்ற பெருமபான்மை வாக்குகள் தமிழ் மக்கள் ஏமாறும் நிலையில் இல்லை என்பதைத் தெளிவுபடுத்தியுள்ளன.

காங்கேசன்துறை தேர்தல் தமிழனுக்கும்—தமிழ்விரோதிக்கும் இடையிலே நடைபெறுகின்றதொன்று என்று கூறிப்போட்டியிட்ட தந்தை செல்வா வென்றுவிட்டார்! தமிழன் வென்றுவிட்டான்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய நாடொன்று பூத்தது!

அன்பு நண்பா,

ஆண்டபரம்பரை மீண்டும் ஒருமுறை ஆள நினைப்பதில் என்ன குறை என்ற கேள்விக் குறியுடன் இதுவரை இருந்திட்ட ஈழத்தமிழினத்தார்—6-2-75ல் நடைபெற்ற காங்கேசன்துறை இடைத்தேர்தலில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகளினால்—ஆண்டபரம்பரை மீண்டும் ஒருமுறை ஆள முடிவெடுத்துவிட்டது என்பதனை அகில உலகுக்கும் எடுத்துக் காட்டி அறிவித்துவிட்ட பின்னர் — தமிழ் ஈழமெங்கும் 'தனித் தமிழ் நாடு' முழக்கம் நம் தமிழகத்தின் தலைவரின்—மாணவ மாணவியரின் இதய கீதமாக—எழுச்சி முழக்கமாக சிங்கள ஏகாதிபத்தியத்தின் செவிப்பறை கிழிந்திட எங்கெங்கும் எழுந்திடும் இச்சமயத்தில் —உலக வரை படத்தில் புதியதோர் நாடு உருவாகியிருக்கிறது என்ற செய்தி செந்தேனாக நம் செவிகளை நிறைத்து நமது இலட்சியத்துக்குப் புதிய வலிவு சேர்த்திருக்கிறது — இந்தக் கிழமை!

ஆம் நண்பா, சைப்பிரஸ் தீவில் பெரும்பான்மைக் கிரேக்க ஏகாதிபத்தியத்தின் கீழ் நசுக்கப்பட்டுக்கொண்டிருந்த சைப்பிரஸ் துருக்கியர்கள் அதிலிருந்து விடுபட்டு தங்களுக்கென சொந்தமான ஒரு தனிநாட்டை—தனி அரசை— அங்கே நிறுவிக்கொண்டிருக்கிறார்கள்! தங்களை சுதந்திர மக்களாக சைப்பிரஸ் துருக்கியர்கள் இன்றைக்கு பிரகடனப்படுத்திக்கொண்டிருக்கிறார்கள்!

இத்தனைக்கும் சைப்பிரஸ் துருக்கியர்களின் எண்ணிக்கை என்ன தெரியுமா? ஆக ஒரு இலட்சத்து இருபத்தெண்ணாயிரம்! ஒரு இலட்சத்து இருபத்தெண்ணாயிரம் மக்கள் தொகையைக்கொண்ட சைப்பிரஸ் துருக்கியர்கள் இன்றைக்கு தங்களுக்கென தனிநாடு ஒன்றை பிரகடனப்படுத்தியிருக்கிறார்கள் என்பதை எண்ணிப்பார்த்திடும்போது—கொடியும் முடியும் வைத்து கொற்றம் செலுத்திய ஈழத் தமிழினத்தவர்களாகிய நாம் 35 இலட்சம் பேர் இங்கு வாழ்ந்து கொண்டும் —நமக்கென தனிப்பெரும் செம்மொழியாம் தமிழையும் அது தந்த இனிய பொக்கிஷங்களான இலக்கியங்களையும் கலாசாரங்களையும் கொண்டிருந்தும்— நமக்கெனவோர் தனிப் பாரம்பரியமும் பழைய வரலாறும் இருந்தும் — அடிமைத் தனத்தைச் சுமந்து கொண்டு — அடக்குமுறைகளுக்கு தலைசாய்த்து—எங்கள் தமிழ் ஈழத்தை சிங்கள ஏகாதிபத்தியம் அணுஅணுவாக அரித்துக்கொண்டிருப்பதை அனுமதித்துக் கொண்டு—வெறும் சோற்றுத் துருத்திகளாக —சோறுருண்டித்த பிண்டங்களாக வாழ்ந்து கொண்டிருக்கிறோமே என்கிற நினைவு என் நெஞ்சிலிருந்து இரத்தக் கண்ணீரை வடித்திடவைக்கிறது!

நண்பா, சைப்பிரஸ் துருக்கியர்கள் இன்றைக்குத் தனியே பிரிந்து தனிநாடமைத்துள்ளனர் என்றால்—முழு சைப்பிரஸ் தீவின் மொத்த பரப்பளவு என்ன தெரியுமா! ஆக 3571 சதுர மைல்!

ஆம்—3571 சதுர மைல் விஸ்தீரணத்தைக் கொண்ட சின்னஞ் சிறு சைப்பிரஸ் தீவிலிருந்து ஒரு இலட்சத்து 28000 துருக்கியர்கள் தனியே பிரிந்து தனிநாடமைத்து வாழத் துணிந்து விட்டார்கள் என்றால்—8000 சதுர மைல் விஸ்தீரணமும் 35 இலட்சம் மக்கள் தொகையும் கொண்ட நம் தமிழ் ஈழம்— அந்நியன் இந்நாட்டில் நுழைகின்ற காலம் வரை தனிநாடாக இருந்திட்ட தமிழ் ஈழம் மீண்டும் தனது இழந்த அரசுரிமையை நிலைநாட்டி சுதந்திர நாடாக ஏன் இயங்க முடியாது?

நண்பா, நாம் கோருகின்ற நமது தமிழ் ஈழத்தைவிட பரப்பளவிலும் மக்கள் தொகையிலும் மிகவும் குறைந்த எத்தனையோ நாடுகள்—50க்கு மேற்பட்ட குட்டி நாடுகள்— இறைமையும், தன்னுரிமையும் சுதந்திரமுள்ள தனித்தனி நாடுகளாக உலகில் அச்சமின்றி வாழும்போது—ஏற்கெனவே நமக்கெனவோர் கொற்றம் அமைத்து கோலோச்சி வந்தவர்க

## அரசியல் மேடை

ளாகிய நாம்—மீண்டும் நம்முடைய இறைமையை உபயோகித்து சுதந்திர மக்களாக ஏன் மீண்டும் வாழக்கூடாது என்பதை ஒவ்வொரு தமிழனும்— குறிப்பாக "பிரிவினை" கோஷமென்று நம் சுதந்திரக் கோரிக்கைக்கு சாயம் பூசிட முயற்சிப்போர்— சிந்தித்திடவேண்டும்!

நீ ஒன்று கேட்டிடக்கூடும் நண்பா—சைப்பிரஸ் துருக்கியர்களுக்கு துருக்கி நாடு உதவி செய்து அவர்களுக்கு தனிநாடு பெற்றுக் கொடுத்திருக்கிறது; ஆனால் நமக்கு யார் உதவிடுவார் என்பதொரு கேள்வியை நீ கேட்டிடக் கூடும்!

உண்மைதான்! சைப்பிரஸ் துருக்கியர்களுக்கு கைகொடுத்திட துருக்கி நாடு முன் வந்தது போல—நசுக்கப்படும் ஈழத் தமிழினத்துக்கு கைகொடுத்திட—உதவி புரிந்திட உலகில் தற்போது யாரும் இல்லை — எந்த நாடும் தயாராக இல்லை என்பது உண்மைதான்! ஆனால் மாறிவரும் உலகில் இன்றைய நிலை தான் நாளைக்கும் நீடிக்கும் என்று யாருமே சோதிடம் கூறிடமுடியாது! சைப்பிரஸ் துருக்கியர்களுக்கு துருக்கி உதவியதுபோல நமக்கு உதவக் கூடிய —உதவத்துடிக்கின்ற — 4½ கோடி தமிழர்கள் அக்கரையிலிருந்தாலும், அவர்களது கைகளும் கால்களும் அங்கு கட்டப்பட்டிருக்கின்றன; அவர்களும் அங்கு சுதந்திர மக்களாக இல்லை; தமிழ்ப்பெருவேந்தனான இராச இராச சோழனின் சிலையை—அந்தமன்னனே கட்டுவித்த தஞ்சைப் பெருவுடையார் கோவிலுக்குள் வைக்கும் உரிமைகூட இன்றி—டெல்லி ஆதிக்கப் பிடியுனுள் தமிழகம் சிக்கித் தடுமாறுகிறது; அந்தப்பிடியிலிருந்து சுயாட்சி பெற்றிட அவர்களும் அங்கே போராடிக்கொண்டிருக்கிறார்கள்!

இந்திய உபகண்டத்திலிருந்து தமிழ்நாடு சுதந்திரநாடாக விரைவில் பிரியும் என்று சர்வோதய இயக்கத்தலைவரும் பழம்பெரும் காந்தியவாதியுமான ஜெயப் பிரகாஷ் நாராயணன் அவர்கள் அண்மையில் கூறியுள்ளது—தமிழக மக்களின் உணர்ச்சித்துடிப்பை அளவிட்டுக்கூறிய கூற்றென்றே நான் கருதுகிறேன்!

ஏனெனில் ஜெயப்பிரகாசர் ஒரு தமிழரல்லவர்; இந்திய தேசியத்திலும் ஒருமைப்பாட்டிலும் அக்கறைகொண்டவர்; இந்திய சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டு சிறைசென்ற ஒரு பழுத்த தேசபக்தர்; நேருவின் இடத்தை நிரப்பக்கூடிய தகுதி பெற்றவர்; வினோபாவின் சீடர்; அப்படிப்பட்டவர் தமிழ் நாடு தனிநாடாக விரைவில் பிரியும் என்று கூறுகிறார் என்றால்—அது தீர்க்கதரிசனம் வாய்ந்ததாக இருக்குமே தவிர புறக்கணிக்கக்கூடிய ஒன்றல்ல!

ஜெயப்பிரகாசர் கூறியதுபோல தமிழ்நாடு தனிநாடாகுமானால்—உலகில் தமிழ் இனம் அதன்பின்பு தலைநிமிர்ந்து வாழமுடியும்! உலகத்துக்கே தமிழினம் வழிகாட்டும் நிலை தோன்றிடும்! உலக நாடுகளில் வாழும் தமிழர்கள் நாய்கள்போல நடத்தப்படும் அவல நிலைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படும்!

ஆனால் — நம்மைப் பொறுத்தவரை— எமக்கு உதவிட யார் இருந்தாலும் இல்லாவிட்டாலும்—யார் முன்வந்தாலும் முன்வராவிட்டாலும் — நாம் அழிந்தாலும் வாழ்ந்தாலும்—சுதந்திர மக்களாக வாழ்வது என்று ஈழத்தமிழினம் தீர்மானித்துவிட்டது! நமக்கு உதவிட யாருமில்லையென்பதற்காக— நாம் அடிமைத்தனத்தை ஏற்றுக்கொண்டு நத்தைப் பிழைக்க முடியாது! தன் கையே தனக்கு துணையாகக் கொண்டு— தம்மை விழுங்கவரும் அடக்குமுறை ஆட்சியை—சிங்கள ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப்போராடி தம்முடைய சுயாதீனத்தை — சுயமரியாதையை — சுதந்திரத் தமிழ் ஈழத்தை அமைத்தே தீருவது என்று தமிழ்ஈழ மக்கள் உறுதிபூண்டுவிட்டார்கள்!

தர்மம் எங்கள் பக்கம்! நீதி எங்கள் பக்கம்! நியாயம் எங்கள் பக்கம்! வரலாற்று உண்மைகள் எங்கள் பக்கம்! தெய்வம் எங்கள் பக்கம்! எண்ணிக்கையில் கூடிய துரியோதனாதியர்களை எதிர்த்து பஞ்சபாண்டவர்கள் தர்மத்தின் துணையுடன் போராடி வெற்றிகண்டார்கள் என்பது பழைய பாரதக் கதை! அறத்தின் துணையுடன், 35 இலட்சம் தமிழர்கள் சிங்கள ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போராடி தங்கள் தாயகத்தை — தமிழ் ஈழத்தை மீட்டு—புதிய பரணி பாடவிருப்பது எழுதப்படவேண்டிய புதிய பாரதக்கதை! இந்தப் புதிய பாரதத்தை ஈழத்தமிழினம் தனது தியாகத்தினால் — செங்குருதியினால் — விரைவில் எழுதியே தீரும்!

உன் அன்புத் தோழன்,

கோவை-மகேசன்

---

## செல்வாவின் வெற்றி உலகத் தமிழர்களின் வெற்றி!

இலங்கை வாழ் தமிழர்களின் தனிச் செல்வமாகவும், உலகத் தமிழினத்தின் உரிமைக்கும் மேம்பாட்டிற்கும் வழி காணும் உத்தமர்களில் ஒருவராகவும் விளங்கும் மாண்புமிகு எஸ். ஜே. வி. செல்வநாயகம் அவர்கள், அண்மையில் நடைபெற்ற இடைத்தேர்தலில் மாபெரும் வெற்றிகளை அள்ளிக் குவித்தார் என்கிற இனிய செய்தி தமிழர் தம் உள்ளங்களில் இன்பத்தேனை இனித்துக் கொண்டிருக்கிறது. 'பெருமை கொள்ளாத தமிழர்' என்ற நல்லுணர்ச்சியில் அனைவரும் மிதக்கின்றோம்.

தாய்த் தமிழ் மொழி பேசி தமிழுணர்வு கொண்டோர் உள்ளமெல்லாம் குளிர்ந்தது.

இனியாவது இலங்கை அரசு தமிழன் சிறப்பினையும், தமிழினத்தின் பெருமையினையும் நன்கு உணர்ந்து, அந்நாடு வளம் பெற—அங்குள்ள மக்கள் நலம்பெற, அனைத்துத் துறைகளிலும் தமிழ்ச் சமுதாயத்திற்கு சம உரிமை வழங்கிட முன் வரும் என நம்புகிறோம்.

இன்றைக்கு, மாண்புமிகு செல்வநாயகம் அவர்களின் வெற்றி, ஈழத்தமிழரின் வெற்றி மட்டுமல்ல உலகத் தமிழரின் எதிரொலித்த வெற்றியாகும்.

— அவர் வாழ்க! அவர் தம் புகழ் என்றும் வாழ்க!

அன்புடன்,

ஆசிரியர், பி. வெங்கடேசன்.

மறுவாழ்வு, சென்னை-21.

---

## மூதறிஞர் அனுப்பிய வாழ்த்துச் செய்தி!

அன்புள்ள திரு. இரா. சனார்த்தனம் அவர்கட்கு—

தாங்கள் திருமணம் செய்துகொள்ளவிருப்பதை அறிந்து நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். தங்களுக்கும் தங்களுக்கு வாழ்க்கைத் துணைவியாக வரவிருக்கும் செல்வி லலிதகுமாரி அவர்களுக்கும் எனது நல்வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

நீங்கள் தமிழ் அறிவும், தமிழ்ப் பற்றும் தமிழ் மக்களின் மேலான வாழ்வில் ஆர்வமும் கொண்ட ஒருவர். உங்களுடைய தமிழ் அபிமானத்தைக் கண்டு நான் மெச்சி வருகிறேன். தமிழ் மக்கள் எங்கிருந்தாலும்— இந்தியாவிலோ இலங்கையிலோ—வேறு எந்த நாட்டிலோ இருந்தாலும் அவர்கள் எல்லோருக்கும் சேவை செய்வதற்கு நீங்கள் எப்பொழுதும் ஆயத்தமாக இருந்து வருகிறீர்கள். குறிப்பாக இலங்கை வாழ் தமிழ் மக்களுக்கு நீங்கள் பெரிய சேவை செய்திருக்கின்றீர்கள்! செய்துகொண்டு வருகின்றீர்கள்.

உங்களுக்கு இப்பொழுது ஒரு வாழ்க்கைத்துணைவியார் கிடைத்திருக்கின்றார். அவருடைய துணையுடன் தாங்கள் இது காலமும் செய்துகொண்டு வந்திருக்கும் தமிழ் மக்களின் சேவையை தொடர்ந்து மேலும் சிறப்பாகச் செய்து வருவீர்கள் என்று நம்புகிறேன்.

தாங்கள் இருவரும் எல்லா நலன்களும் பெற்று வாழ மீண்டும் என வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

தங்கள் அன்புள்ள

தெல்லிப்பளை 23-1-75

எஸ். ஜே. வே. செல்வநாயகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# டாக்டர் இரா. சனுர்த்தனம் - லலித குமாரி



புதுமணத் தம்பதிகள் - டாக்டர் சனுர்த்தனமும் டாக்டர் லலித குமாரியும் மணக்கோலத்தில் காணப்படுகின்றனர்.

ஈழத் தமிழினத்தின் விடுதலைக்காக தமிழகத்திலிருந்து இடையறாது உழைத்து வருபவரும் ஈழத்துத் தமிழ் இளைஞர்களின் உள்ளமெலாம் நிறைந்திருப்பவரும், உலகத் தமிழ் இளைஞர் பேரவைத் தலைவருமான டாக்டர். இரா. சனுர்த்தனம் எம். ஏ. அவர்களுக்கும் டாக்டர் தா. லலிதகுமாரி அவர்களுக்கும் சென்னை பெரியார் திடலில் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் கருணாநிதி தலைமையில் 2-2-75 ஞாயிற்றுக்கிழமை மிகச்சிறப்பான முறையில் திருமணம் நடைபெற்றது.

இத் திருமண விழாவில் திராவிடக் கழகச் செயலாளர் திரு. கி. வீரமணி, நில்லிவில்லாளன் எம். பி. ஆற்காடு வீராசாமி எம். எல். ஏ. இந்திரா காங்கிரசைச் சேர்ந்த ஈ. வி. கே. சம்பத், நாத்திகம் இராமசாமி, சென்னை பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் நெ. து. சுந்தரவடிவேலு, ஏ. வி. பி. ஆசைத்தம்பி, தமிழக உள்ளாட்சி அமைச்சர் மன்னை ப. நாராயணசாமி, கே. ஏ. மதியழகன், கண்ணதாசன் ஆகியோர் மணமக்களை வாழ்த்தி உரை நிகழ்த்தினர்.

காங்கிரஸ் தலைவர் காமராசர், தி. மு. க. பொதுச் செயலாளர் நாவலர் இரா. நெடுஞ்செழியன், தமிழரசுக் கழகத் தலைவர் மா. பொ. சிவஞானம், இலங்கைத் தமிழரசுக் கட்சித் தலைவர் நாவலர் அமிர்தலிங்கம், ஈழத் தமிழர் தந்தை மூதறிஞர் செல்வா ஆகியோர் அனுப்பியிருந்த வாழ்த்துச்செய்திகளும் மணவிழாவில் வாசிக்கப்பட்டன.

தமிழ் ஈழத்திலிருந்து ஆயிரக் கணக்கான வாழ்த்துச் செய்திகள் சனுர்த்தனம் தம்பதிகளுக்கு வந்து குவிந்துள்ளன. இதே போல, மலேசியா, இங்கிலாந்து, அமெரிக்கா, போன்ற நாடுகளிலிருந்தும் வாழ்த்துச் செய்திகள் குவிந்துள்ளன. 'இலண்டன் தமிழோசை' தனது 2-2-75 இரவு ஒலிபரப்பில் சனுர்த்தனம் தம்பதிகளை வாழ்த்தியது.

## டாக்டர் கலைஞர் பேச்சு

திருமணத்தை நடத்தி வைத்தபின்னர், மணமக்களை வாழ்த்தி கலைஞர் டாக்டர் கருணாநிதி அவர்கள் பேசியதாவது:-

நண்பர்களே; மணமக்களை பெரியோர்களும் பல வேறு கட்சியினுடைய தலைவர்களும் வாழ்த்தியிருக்கிறார்கள்.

இன்று நம்முடைய அன்பான இனிய வாழ்த்துக்களை பெற்றுள்ள இனிய நண்பர் சனுர்த்தனமும் செல்வி டாக்டர் லலிதகுமாரி அவர்களும், தமிழ் போல் தழைத்து வாழ்க என்று என்னுடைய வாழ்த்துக்களை உங்களுடைய வாழ்த்துக்களோடு இணைத்துக் கொள்வதில் மிகுந்த பெருமை அடைகிறேன்.

நண்பர் சனுர்த்தனம் அவர்கள் எவ்வளவு துடிப்புள்ள வாலிபர் என்பதையும் அவர்கள் தமிழின் பால், தமிழர் சமுதாயத்தின் பால், தமிழர்களுடைய உரிமை வேட்கைக்காக நடத்துகின்ற அறப்போர்க்களத்தின் பால் எவ்வளவு ஆர்வம் உடையவர் என்பதையும் நாம் அனைவரும் நன்ருக அறிவோம். அவருக்கு தமிழ் நாட்டில் உள்ள தமிழர்கள் மீதுள்ள அன்பையும் அக்கறையையும் விட வெளி நாட்டில் வாழுகின்ற தமிழர்கள் மீது அதிக அன்பும் அக்கறையும் உண்டு என்பதை நீங்கள் எல்லாம் நன்ருக அறிவீர்கள்.

எனக்கு முன்னுல் இங்கே பேசியவர்கள் குறிப்பிட்டதைபோல் அவருடைய திருமண விழாவிலே கலந்து கொள்கிற நாம இவ்வளவு நேரம் அவர் மணமகளை பொறுமையோடு இங்கு வந்து உட்கார்ந்திருக்கிருரே என்பதை எண்ணி ஆச்சரியப்படலாம். அவருடைய திருமணம் நானும் நம்முடைய சகோதரர் மதி அவர்களும் பேசிக்கொண்டோம் இது ஒரு அகில உலக திருமணம் என்று கூடபேசிக் கொண்டோம். அதை மெய்ப்பிக்கின்ற வகையில் யப்பானிய இசையோடு இந்த திருமண விழாவிலே நண்பர் சனுர்த்தனமும் அவர்களுடைய துணைவியாரும் வாழ்த்துக்களை பெற்றிருக்கிருர்கள்.

## உலகத்தொடர்பு கொண்டவர்

இலங்கையில் இருந்தும் மலேசியாவில் இருந்தும், வேறு பல வெளி நாடுகளில் இருந்தும், இந்தியாவில் உள்ள பல்வேறு மாநிலங்களில் இருந்தும் அவர் இந்த திருமணத்திற்கான வாழ்த்துக்களை பெறுகின்ற அளவிற்கு அவ்வளவு நண்பர்களை பலவேறு நாடுகளில் பெற்றிருப்பவர்.

சனுர்த்தனம் என்கின்ற பெயருக்கே உலகம் என்கின்ற ஓர் பொருளும் உண்டு. தனது பெயருக்கு ஏற்ப உலகத்தொடர்பு கொள்ளவேண்டும் என்பதிலே தணியாத ஆசை கொண்டவர். போராட்டம் நடத்தவேண்டும்என்பதிலேயும் மிகுந்த ஆர்வம் படைத்தவர். அடிக்கடி மறியல், கறுப்புக்கொடி, உண்ணாவிரதம், இவை எல்லாம் அவருக்கு தண்ணீர் பட்ட பாடு.

என்னுடைய வீட்டு விருந்தினராக வந்திருக்கிருரோ இல்லையோ அரசாங்கத்து விருந்தினராக அவர் சில நேரங்களில் இருந்ததுண்டு. நான் அவரைக் கேட்டுக் கொள்வதெல்லாம் உண்ணாவிரதத்தையெல்லாம் நாட்டோடு வைத்துக்கொண்டு வீட்டிலும் உண்ணாவிரதத்தை நடத்தாமலிருக்க வேண்டும் என்றுதான் நான் அவரை கேட்டுக்கொள்கிறேன்.


வீட்டிலே நடைபெறுகின்ற போராட்டங்கள் எப்படிப்பட்ட போராட்டங்களாக இருக்கவேண்டுமென்பதை திருக்குறளில் மூன்ருவது பாலைப் படித்திருக்கின்ற சனுர்த்தனம் அவர்கள் நன்ருக உணர்வார்கள் என்று நான் கருதுகின்றேன்.

## விடுதலை வீரமணி

திராவிடர் கழகச்செயலாளர் திரு. கி. வீரமணி பேசுகையில் கூறியதாவது:

இங்கு பேசிய நண்பர் ஒருவர் சனுர்த்தனம் என்ன செய்தாலும், முதல்வரின் தலைமையில்தான் திருமணம் செய்து கொள்கிருர் என்று குறிப்பிட்டார். அவர் எந்தப் போராட்டத்தை நடத்திலுைம், பெரியார் திடலை மையமாகக் கொண்டுதான் ஆரம்பிப்பார் என்பது எனக்குத் தெரியும்.

ஒரு சில வாரங்களுக்கு முன் "ஆனந்த விகடன்" பத்திரிகை படித்த நண்பர்கள். நண்பர் சனுர்த்தனத்தை மாமியார் வீட்டுக்கு அனுப்பிய கதையைப் படித்திருப்பார்கள் என நம்புகிறேன். மாமியார் வீட்டுக்கு அனுப்பியவரும் இன்று இருக்கிருர், போனவரும் இங்கு இருக்கிருர். அப்போது மாமியார் வீட்டுக்கு அனுப்பினுர், இப்போது மாமியார் வீட்டுக்கு அனுப்புகின்ருர். அவரது தலைமையில் இம் மணவிழா நடப்பது மிக மிக முக்கியமானது. உரிமைக்கு குரல் கொடுக்கத் தயங்க மாட்டார். அதே நேரம் உதவிக்கு கை கொடுக்கவும் தயங்க மாட்டார் என்பதை இங்கு காட்டிவிட்டார். ... இத் திருமணம் நடைபெறுகிறது.



## திருமண வாழ்த்...

ஈழம் வாழ் இளை...
இதயம் வென்ற மண...
மறத் தமிழ் வீர...
நிறக் கரங்கொள் ம...

அன்றொருநாள்—
ஆண்ட பரம்பரை
ஆண்டியா...
அடிமையா...
நாடிழந்து
நலிவுற்று
வாழ்விழந்து...
சிந்தை நிறை
சினங்கொ...
சீர் மணவாளா!

நங்கையரே!
நாடிழந்தோமே
விடிருந்து
விருந்து
காப்பதோவென
களம்வெல்
காளையர் தலைவன்
கரங்கொள்மணமக...

தம்பியென
நங்கையென
நானிலத்தோர்
நவிலும் வண்ணம்
வளமாக வாழ்வீர்!

ஈடில்லா இன்பத்தமிழ் வா...
இனிய அன்பு வாழ்த்துக்க...

க. நவசோதி,
அமைப்பாளர்,
உலகத் தமிழ் இளை...
இலங்கைக் கிளை.

## எமது நன்றி!

உலகத் தமிழ் இளைஞர் பேரவைத் தலைவர் டாக்டர் இரா-சனுர்த்தனம் - லலித குமாரி திருமணப்படங்கள் சம்பந்தப்பட்ட புளக்குகளை அன்பளிப்பாக வழங்கிய பிரபல கட்டிடக் கலைஞரும் அனைத்துலக தமிழாராய்ச்சி மன்ற இலங்கைக் கிளையின் பொதுச்செயலாளருமான திரு. வி. எஸ். துரைராசா அவர்களுக்கு சுதந்திரன் வாசகர்கள் சார்பில் எமது நன்றி. —ஆர்.




திராவிடக் கழகப் பொதுச் செயலாளரும் 'விடுதலை' ஆசிரியருமான திரு. கி. வீரமணி மணமக்களை வாழ்த்திப் பேசுகிருர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி கூறுகிருர் டாக்டர் சனுர்த்தனம்!



கவியரசு கண்ணதாசனுடன் மணமக்கள் !



### ஈ. வி. கே. சம்பத்

இந்திரா காங்கிரஸ்கட்சித் தலைவர் ஈ. வி. கே. சம்பத் தனது வாழ்த்துரையில் கூறியதாவது:—

நண்பர் சனுர்த்தனம் இலங்கைத் தமிழர்களின் பிரச்சினையில் விசேட அக்கறை எடுத்து, பல நேரங்களில் ஆபத்தான சூழ்நிலைகளில் கூடத் தனது தொண்டினையும் அனுதாபத்தையும் வெளிப்படுத்திக் கொண்டு வந்திருக்கிருர். அவருடைய இல்லறம் மிகச் சிறப்பாக அமையும் என்பதில் நம் எல்லோருக்கும் ஆழமான நம்பிக்கை உண்டு. அவருடைய வாழ்வு சிறக்க வேண்டும், இல்லறம் நல்ல சிறப்புகளை எய்த வேண்டுமென்று நானும் நண்பர்களுடன் வாழ்த்தி அமைகிறேன். வணக்கம் நன்றி.

### நாத்திகம் ராமசாமி

நாத்திகம் ராமசாமி பேசுகையில் கூறியதாவது:—

நண்பர் சனுர்த்தனம் தமிழர்களுடைய நலனுக்கு, தமிழர்களுடைய வாழ்வுக்கு, உலகில் எந்தக் கோடியில் தமிழர்களுடைய உரிமை பறிக்கப்பட்டாலும், அதை தட்டிக் கேட்கும் ஆண்மையுடைய தமிழர்களுடைய பிரதிநிதியாக விளங்கி வருகிற ஒரு இளைஞராகும் இவருடைய வாழ்வுக்குத் துணையாக அமைகின்றசகோதரி லலிதகுமாரி அவர்கள் அவருக்கு ஏற்ற உறுதுணையாக அமைந்து, அவரது பணியைச் செய்வதற்கும், தமிழர் நலம் காப்பதற்கும், தமிழர்களுடைய மொழி, கலாச்சாரம், இன ஒற்றுமை அனைத்தையும் பாதுகாக்க அவரும் துணை நிற்பார் என நம்புகிறேன்.

### சுந்தர வடிவேலு

சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் நெ. து. சுந்தரவடிவேலு கூறியதாவது;-

இத் திருமண விழாவிலே கலந்து நண்பர் ஜனுர்த்தனத்தை வாழ்த்துவது எனக்கு மகிழ்ச்சியை அளிக்கிறது. காரணம் கடந்த 20 வருடங்களாக அவரை நான் அறிவேன். ஆகவே அவருடைய வளர்ச்சி எனக்கு எப்போதும் மகிழ்ச்சியை கொடுத்துக்கொண்டிருக்கும். அவர் டாக்டர் பட்டம் பெறுகிறபோது, நான் தான் துணை வேந்தராக இருந்து கொடுக்கும் பேறு எனக்குக் கிடைத்தது. இத் திருமணம் சிக்கனமாகவும், சீர்திருத்த முறையில் நடந்ததை இங்கு எல்லோரும் பாராட்டினார்கள். தனது திருமணத்தை இவ்வளவு சிறப்பாக நடாத்திக் காட்டிய அவர், தொடர்ந்தும் தனது வாழ்க்கை முழுவதும் இதைத் தொடர்ந்து கடைப்பிடித்து நலலதொரு குடும்பம், ஒரு சிறந்த பல்கலைக் கழகம் என்று உலகத்துக்கு எடுத்துக்காட்டாக வாழ்வதுடன், தொடர்ந்துபொதுத் தொண்டாற்ற வேண்டும், தமிழ்த்தொண்டாற்றவேண்டும், நீங்கள் எல்லா நலமும் பெற்று இன்புற்று வாழ வேண்டும் என்று வாழ்த்தி எனது உரையை முடிக்கிறேன். வணக்கம்

### நன்றி

மணமகன் ஜனுர்த்தனத்தின் நன்றியுரை வருமாறு:-

மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களே, எங்களை வாழ்த்திய பெரியோர்களே, நண்பர்களே அனைவருக்கும் என் சார்பாகவும், என் துணைவியின் சார்பாகவும் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன். விருந்து கொடுக்கவில்லையே என்று வருத்தப்பட்ட நண்பர்கள் இங்கே கோகோ கோலாவாவது கொடுத்திருக்கக் கூடாதா என்று வருத்தப் பட்டார்கள். கோகோ இங்கு கொடுப்பதால் ஆகிற செலவான 500/- ருபாவை வறட்சி நிவாரண நிதிக்காக மாண்புமிகு டாக்டர் கலைஞரிடம் கொடுக்கிறேன்.

ஔவை நடராசன் அவர்களின் நன்றியுரையுடன் திருமணம் இனிதே நிறைவேறியது. திருமணத்தின் போது பச்சையப்பா கல்லூரி முதல்வர் டாக்டர் சண்முகநாதன், கோவை ராஜா, ஜப்பான் தேசத்தை சேர்ந்த திருமதி நொபி சுபேன் (இவர் ஜப்பான் மொழியில் திருமண வாழ்த்துப் பாடலைப் பாடினுர்) மதியழகன், திரு. ராசா முகமது, நீதிபதி கோதலிங்கஷ்ணன் நெல்விக் குப்பம் கிருஷ்ணமூர்த்தி எம். எல். ஏ. மற்றும்பலருப் வாழ்க்கிஞர்கள், சினிமாநடிகர் ஜெய்சங்கர், மனேகர், அசோகன், கண்ணதாசன் மற்றும் பலரும் சமூகமளித்திருந்தார்கள். தமிழகத்தில் கல்வி பயிலும் தமிழ் ஈழ மாணவர்கள் சார்பிலும், மர்மத்தீவு வாழ்த்த மடல்கள் பிரமன்னன் சார்பிலும் இரண்டு கரித்து வழங்கப்பட்டது.

## ... வாழ்த்து

...ளைஞர்
...வன்ற மணவாளா
...ரல்
...கொள் மணமகளே!

...ருநாள்—
...பரம்பரை
...யாம்
...யாப்
...து
...து
...தாவெனச்
...நிறை
...காள்
...வாளா!

...பரே!
...தாமே
...து

...தாவென
...ல்
...ர் தலைவன்
...ாள்மணமகளே!

...பண
...யன
...த்தோர்
... வண்ணம்
...க வாழ்வீர்!

...த்தமிழ் வாழ்வுக்கு
...வாழ்த்துக்கள்.

...சோதி.
...ளர்,
...தமிழ் இளைஞர் பேரவை.
...கோ.

## தமிழ் வாழ தம்பதிகள் வாழ்க

இல்லறம் புகுந்துள்ள இரா. சனுர்த்தனமும்
இல்லாளாய் இணைந்துள்ள லலிதகுமாரியும்
இணைபிரியாது இனிது நலம் வாழ்கவென்றே
இலங்கைத் தமிழர்யாம் இதயமகிழவாழ்த்துகிறோம்.
அன்பும் அறனும் உடைத்தாக இல்வாழ்வில்
ஆண்டு பல வாழ்க சனுர்த்தனனே
இல்லறம் நல்லறமாய் ஏது குறையுமின்றி
ஈழத்தமிழர்யாம் வாழ்த்துகிறோம் வாழியவே!
உரிமையுடன் உள்ளன்பு கொண்டோராகி
ஊக்கமுடன் வாழிய! சனுர்த்தனனே.
எங்கள் ஈழத்தமிழர்தம் இதயத்திருப்பவனே
ஐக்கியராய் அனைத்துலகும் தமிழர் நலம் வாழ
ஒற்றுமைக் குரல் தருவோய்! சனுர்த்தனனேவாழியவே.
ஓருயிர் ஈருடல் போல் ஒத்த நன் மணமக்களாய்
ஔவை புகழ் தமிழ் போல அழகு இளமையுடன் வாழி!

*வாழிய நீவிர்! வாழ்க பல்லாண்டு!*

—கே. கே. தியாகமணி.



மணமக்களை வாழ்த்தி பேசுகிருர் - சென்னைப் பல்கலைக்கழக துணைவேந்தர், திரு. நெ. து. சுந்தரவடிவேலு அவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துரையப்பா சிறைக்குள் தள்ளப்படும் நாள் விரைவில் வரலாம்!

## யாழ் வரியிறுப்பாளர்கள் இப்படியாக கதைக்கின்றனர்!

கூட்டுறவுத் துறையை அரசாங்கம் பொறுப்பேற்பதற்கு முன்னர் கூட்டுறவுத் துறை சிறந்து விளங்கிய இடங்களில் யாழ்ப்பாணமும் ஒன்றாகும். ஆனால் இன்றோ யாழ்ப்பாண மாநகர பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் இடம் பெற்ற கூப்பன் புள்ளி மோசடியைப் பற்றி அதன் தலைவரான திரு. துரையப்பா பத்திரிகைகளில் அறிக்கை வெளியிட்டிருப்பதைப்பார்த்தால் சிரிப்பாய்ச் சிரிக்கத்தான் தோன்றுகின்றது.

சங்கத்திற்குக் கூப்பன் மோசடிக்கும் தொடர்பு இல்லை என்றும், கிளை முகாமையாளர்களுக்கும் உணவுக் கட்டுப்பாட்டு இலாகாவுக்கும்தான் தொடர்பு என்றும் உளறியிருக்கின்றார். அப்படியானால் கிளை முகாமையாளர்களை நியமனஞ் செய்தது யார்? கிளை முகாமையாளர்கள் எந்த நிர்வாகத்தின் கீழ் இயங்குகின்றார்கள்? இவையெல்லாம் பொது மக்களுக்கு விளங்காதென்று அதன் தலைவர் துரையப்பாவும் நெறியாளர் குழு அங்கத்தினர்களும் நினைக்கலாம்.

ஆனால் பிரதமரின் மருமகனை குமார் ருபசிங்கா கூறியதைப்போல கடந்த பொதுத் தேர்தலுக்குப் பின் யார் நீலச்சட்டையை மாட்டிக் கொண்டவர்கள் என்றும், அதற்கு முன்னர் ஊழற் சேற்றில் புரண்டவர்கள் யாரென்றும் மக்கள் நன்கு எடைபோட்டுவிட்டார்கள்.

தனக்கும் கூப்பன் புள்ளி மோசடிக்கும் தொடர்பில்லை என்றால் இது வரைக்கும் சம்பந்தப்பட்ட கிளை முகாமையாளர்களை ஏன் அழைத்து விசாரிக்கவில்லை? அதை விடுத்து ஒவ்வொரு நெறியாளர் குழு அங்கத்தினரும் இதைப் பற்றிச் சிந்தியாது சங்கத்தின் களஞ்சியங்களுக்கு சென்று என்ன அத்தியாவசியமான பொருட்கள் இருக்கின்றதோ அவ[ற்றை] [illegible] போட்டு தங்களது வீட்டுக்கு எடுத்துச் செல்லத்தானா வர்த்தக அமைச்சரால் இவர்கள் நியமிக்கப்பட்டார்கள்? இப்படியெல்லாம் யாழ்ப்பாண மக்கள் சந்தி, சந்தியாய் நின்று கதைக்கத் தொடங்கி விட்டார்கள்.

திரு. துரையப்பாவின் காரான 6 ஸ்ரீ 439 இலக்கமுடைய கார், கூப்பன் புள்ளி மோசடியைப் பற்றி மக்கள் அறிவதற்கு முன்னர் ஒவ்வொரு கிழமையும் கூப்பன் புள்ளி மோசடி இடம் பெற்ற ஒரு கிளைச் சங்கத்தின் முன்னால் நிற்குமே; இது எதற்காக அந்தக் கிளைக்குப் போகவேண்டும்? இவை எல்லாம் மக்களுக்கு தெரியாது என்று துரையப்பா நினைக்கலாம். ஆனால் மக்கள் எதனையும் அறிவார்கள் என்பதனை அவர் இனி மேலாவது அறியட்டும்.

ஒரு நீலக் கொடியின் கீழ் நின்று எதனையும் சாதித்து விடலாம் என்று எண்ணி இருந்த இவரின் நினைப்பை, யாழ்ப்பாண சமசமாஜக் கட்சி செயற்குழுவினர் வர்த்தக அமைச்சருக்கு அனுப்பியுள்ள மகஜர் மூலம் சிதறடித்து விட்டார்கள். அதற்காக சமசமாஜ செயற் குழுவினர்களுக்கு ஒரு சபாஷ்போடலாம்.

உண்மையில் யாழ்ப்பாண வாலிபர்களை கள்வர்களாக் [illegible] சிட்டடைய பெருமை துரையப்பாவையே சாரும். ஒரு முறை களவெடுத்தால் முதல் முறை தண்டனையை கொடுத்தால் எவனும் திருந்துவான். ஆனால் திரு. துரையப்பாவோ அவனை தற்காலிகமாக வேலை நீக்கஞ் செய்த பின் அவனை அழைத்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக் கிளை ஒன்றை திறப்பதன் மூலம் அவனுக்கும் மறுபடியும் வேலை வழங்குகிறார். இவை தானா பொது மக்கள் சேவை?

இவர் இப்படித்தான் என்றால் இவரின் மனைவியான சுகாதார வைத்திய அதிகாரியோ இவரை விட ஒருபடி மேலாக திகழ்கின்றார். யாழ்ப்பாண மாநகர சபையில் சுகாதார வைத்திய அதிகாரியாகக் கடமையாற்றும் இவர் மாதம், மாதம் கணக்காக ஆயிரத்திற்கு மேற்பட்ட பணத்தை சம்பளமாகப் பெறுகின்றார்! இதை விட வேறு கிம்பளங்களும் உண்டாம்; இவையெல்லாம் தற்போது Audit பகுதி உத்தியோகத்தர்களால் அம்பலத்துக்கு வந்து விட்டதாம்! இவர்கள் சிறை செல்லும் காலம் வெகு விரைவில்—வரலாமாம், இப்படியாக யாழ்ப்பாண மக்கள் கதைக்கின்றார்கள்.

—அவதானி.

# தன்மானத் தந்தை!

**தந்தை**

தன்மானம் பேணும் தந்தை
    தடைகண்டு அஞ்சாத் தந்தை
தன்மானம் விட்ட மந்தைத்
    தமிழன்முன் நாணும் தந்தை
தன்னினம் பெற்ற நிந்தை
    தவிர்த்திட வாழும் தந்தை
தன்னாட்சி பெற்ற முந்தைத்
    தமிழீழம் அமைக்கும் தந்தை-

**தீர்ப்பு**

செல்வ நாயகம் தேர்ந்த தீர்ப்பு
    செந்தமிழ் மானம் காத்த தீர்ப்பு
எல்லா உலகமும் அறிந்த தீர்ப்பு
    ஈழத் தமிழர் எழுதிய தீர்ப்பு
போ[ன]வா எதிர்கள் புரிந்த எதிர்ப்பு
    பொசுங்க அழித்த புகழ்சேர் தீர்ப்பு
தன்னூர்த் தலைநகர் வைத்தே ஆண்ட
    நாட்டைப் பெற்றிடும் நல்ல தீர்ப்பு.

**பாராட்டு:**

எரியும் தீயில் பஞ்சிட்டார்
    எழுச்சி தடுத்த எதிர்க்கட்டும்
தரியா நாற்றின் நீரோட்டம்
    தங்கா பின்னே உணரட்டும்
சரிதைச் சான்று பார்க்கட்டும்
    சத்தியம் சாகா தறியட்டும்
உரிமைக் குந்தன் போராட்டம்
    உலகம் இதனைப் பாராட்டும்.

**நிகழ்ச்சி:**

உரிமைத் தாகக் கிளர்ச்சியினில்
    உளத்தில் பிறந்த உணர்ச்சியிது
பெரிதாய்ப் பரந்து வளர்ச்சியுறப்
    பீறிப் பாய்ந்த எழுச்சியிது
பெரியார் செல்வா மகிழ்ச்சியுறப்
    பெற்ற வெற்றி முயற்சியிது
சரிதைப் பெருமைப் புகழ்ச்சிதரும்
    சாதனை புரிந்த நிகழ்ச்சியிது.

**தோன்றும்:**

தன்னாட்சி பெற்று நிற்கும்
    தமிழீழம் படைக்க என்றே
தன்மானத் தந்தை நீதான்
    தளக்கல்லைப் பதித்தாய் இன்றே
அண்ணனே உந்தன் எண்ணம்
    அழியாது செயலாய் மாறும்
பொன்னான நாளும் இந்தப்
    பூமியில் தோன்றும் தோன்றும்.

—ஆரையூர் அமரன்

# வாசகர் கருத்து

சுதந்திரன் ஆசிரியர் திரு. கோவை மகேசன் அவர்களுக்கு:-

தமிழர் கூட்டணிக்கும் தமிழரசுக் கட்சிக்கும் தாங்கள் சுதந்திரன் பத்திரிகை மூலம் ஆற்றிவரும் சேவை துடிக்கின்ற இனம் தமிழ் உள்ளங்களை பெரிதும் கவர்ந்துவிட்டது.

எடுத்த எடுப்பிலே கடைச்சட்டபத்துப் உங்களின் பேனாவின் கூர்மையும் எதிரியை திணறவைக்கும் அதிரடியும், உங்களுக்கு நிகர் ஈழ நாட்டின் தமிழ் பத்திரிகை உலகில் தற்போது யாரும் இருக்க முடியாது. காங்கேசன்துறை இடைத்தேர்தலில் தாங்கள் ஆற்றியுள்ள பெருந்தொண்டு மிக! மிக!! தமிழுக்கு செய்யவேண்டிய அத்தனையையும் உங்கள் பேனா முனை மூலம் எடுத்து காட்டியதுடன் செயலிலும் செய்து காட்டிவிட்டீர்கள்.

தமிழ் நாட்டிலே தமிழன் ஆட்சிக்கு தேர்தல் நடக்கும் போது குறிப்பாக தி. மு. க. கட்சிக்கு— கலைஞர் அண்ணா [illegible] கும் ஆதரவாக மாலை மணி (வார இதழ்) ஆசிரியர் இளங்கோ தொடுக்கும் சொற்போரையும் உங்கள் சுதந்திரனில் வெளியாகும் அடுக்கு மொழிகளையும் அடுக்கடுக்கான புள்ளி விபரங்களையும் ஒப்பிட்டுப்பார்க்கும்போது இரண்டு பத்திரிகை ஆசிரியர்களும் இரட்டையர்கள் போல் தோன்றுகின்றது.

ஆகா! என்ன உங்கள் அற்புதமான தமிழ் சொற்கோவை! எடுத்த எடுப்பிலேயே புள்ளிவிபரங்களுடன் எதிரியின் முகமூடியை கிழித்து விடுவதில் சமர்த்தர் நீங்கள்! காங்கேசன் தேர்தலுக்கு வில்லிரித்த அரசின் அம்மையாருக்கு போருக்குப்போர் வெட்டுக்கு வெட்டு அடிக்கு அடி கொடுத்தீர்கள். அவரது அடிவருடிகள் அமைச்சர்கள் குரியர், கெனமன், பெரேரா, இலங்கரத்தின, சாத்முத் தெட்டுவேகம, அனுரா, சுனித்திரா, ருபசிங்க, பீலிக்ஸ்டயஸ் இன்னும் முன்னணி சிங்களப் பீரங்கிகளுக்கு, தளபதி அமிர், சொல்லின் செல்வர் அண்ணன் இராசதுரை, அருமை தம்பி இளம் கவிஞர் காசி, தமிழ் சொற் "கோவை" மகேசன், சங்கரர், மு. சிவா, ஆனந்தசங்கரி, [illegible] கத்துரை ஆகியோர் [illegible] தாக்குதல் நட[த்தி] [illegible] பீரங்கியால் எதிரியின் கோட்டையை தகர்த்து தூள் தூள் ஆக்கி விட்டார்கள்.

இந்த ஈழ வள நாட்டை உலகின் முன்னணியில் திகழ வைத்தவர்கள் தமிழ் மக்கள். தங்களுடைய இரத்தம் வியர்வை, கண்ணீர் சேவை ஆகியவையால் பொருளாதாரக் கோட்டையை கட்டி எழுப்பியவர்கள் தமிழர்கள். மொழி மதம் என்னும் சிங்கள துவேச வகுப்புவாத கொள்கையால் அழகான அற்புதமான அக்கோட்டையை தகர்த்து உடைத்துபொடிப் பொடியாக்கி விட்டார்கள். சிங்கள தமிழ் ஒருமைப்பாடு என்ற சொல்லுக்கு இடம் இல்லாது தனியே பிரிந்து தனித்து வாழ்வதே சிறந்ததென காங்கேசன் மக்கள் அளித்த தீர்ப்பு தனிநாடு என்னும் கோட்டைக்கு சிறப்பான அழகான திட்டமிட்ட அத்திவாரமாக அமைந்துள்ளது.

அதைக் கட்டி எழுப்பும் பணி நெருப்புடன் போராடி வெற்றிபெறுவதுபோன்றது. தியாகம், சேவை, செங்குருதி, கண்ணீர் ஆகியவை தான் சுதந்திரத்துக்கு மெருகுகொடுக்குஞ்சாந்து.

இதற்காக ஆக எந்தும் எந்த எதிர்ப்புக்கும் ஈடுகொடுக்கும் இளைஞர்கள் புலிகளை, படை படையாக அணி அணியாக இங்கு வைக்கவேண்டியது உங்களைப் போன்றோர் களின் கையில்தான் உள்ளது

வெ. சுப்பையா
[illegible]
உறுப்பினர்
[illegible]
மல்வத்தை.

# உதயசூரியன் கொடியுடன் உறுதிமொழியெடுக்க 'மூதறிஞர்' வந்தார்!

காங்கேசன்துறை தொகுதியின் தேசியபேரவை உறுப்பினராக 16000 மேலதிக வாக்குகளால் மீண்டும் தெரிவுசெய்யப்பட்ட தமிழ் ஈழ முதல்வர் தந்தை செல்வா 11-2-75 பிற்பகல் 2 மணிக்கு சம்பிரதாயப்படி தமிழில் உறுதிமொழி எடுத்தார். உறுதிமொழியெடுப்பதற்காக தந்தை செல்வா தேசிய பேரவைக்கு தமிழரசுக் கட்சியின் மூவர்ணக் கொடியும், தமிழர்கூட்டணியின் உதயசூரியன் கொடியும் பறக்கவிடப்பட்ட காரில் வந்திருந்தார்.

தேசிய அரசப்பேரவையின் வாசலில் பெருந்திரளான தமிழர்கள் கூடிநின்று தந்தைக்கு மாலையிட்டு உள்ளே அனுப்பிவைத்தனர். தமிழ்இளைஞர்பேரவை கொழும்புக் கிளையின் சார்பில் திரு. செல்வக்குமார் மூதறிஞருக்கு கைத்தறி வேட்டியொன்று அன்பளிப்பு செய்தார்.

மூதறிஞர் செல்வாவை தேசிய அரசப்பேரவைக்குள் கூட்டணி பா. உ.க்களான திருவாளர்கள் செ. இராசதுரை, வி. என். நவரத்தினம், வி. தர்மலிங்கம், வி. ஆனந்தசங்கரி, அ. தங்கத்துரை, எக்ஸ். எம். செல்லத்தம்பு, க. ஜெயக்கொடி, க. துரைரத்தினம், பண்டிதர் கா. பொ. இரத்தினம் ஆகியோர் அழைத்து வந்தனர்.

மூதறிஞர் உறுதிமொழியெடுப்பதைக்காணவும் அவரது உரையைக்கேட்கவும்

—8-ம் பக்கம் பார்க்க


# இதோ ஒரு நற்செய்தி

பாவனையாளரின் நலன்கருதி எமது உற்பத்திப் பொருட்களின் விலையை மேலும் குறைத்துள்ளோம்

**புதிய விலைப்பட்டியல்**

| | | | ரூ. ச. |
|---|---|---|---|
| மில்க்வைற் நீலசோப் | 1 கட்டி | ... | 60 |
| நியூ மில்க்வைற் சோப் | 1 கட்டி | ... | 75 |
| மில்க்வைற் பெரிய பார் சோப் | | ... | 3—50 |
| மில்க்வைற் சிறிய பார் சோப் | | ... | 1—75 |
| மில்க்வைற் சலவைப் பவுடர் 6 அவுன்ஸ் பெட்டி | | ... | 1—25 |
| மில்க்வைற் சலவைப் பவுடர் 3 அவுன். பைக்கற் | | ... | 60 |
| மில்க்வைற் சலவைப் பவுடர் 1 அவுன். பைக்கற் | | ... | 25 |
| மில்க்வைற் சலவைப் பவுடர் 1 இரு. பைக்கற் | | ... | 3—80 |
| மில்க்வைற் நீர் வாசனை சோப் 1 கட்டி (வேப்பெண்ணெய் கலந்தது) | | ... | 1—00 |
| மில்க்வைற் மொடிகேட்டற் சோப் 1 கட்டி | | ... | 90 |
| மில்க்வைற் துண்டு சோப் பெரிது 1 கட்டி | | ... | 30 |
| மில்க்வைற் துண்டு சோப் சிறியது 1 கட்டி | | ... | 15 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பொழுது காட்சிதருகிறது 6வது வாரம்

கெபிட்டி

உங்கள் காலிலிருக்கும் செருப்பு உங்களுக்கு சேவை செய்து தன்னைத் தானே அழித்துக் கொள்கிறது ஆனால் உங்கள் சகயிலிருக்கும் பைப்பு உங்களையே அழிக்கிறது

சாவித்திரி
ஏ. வி. எம். ராஜன்
பிரமிளா
மேஜர்
தேங்காய்சீனிவாசன்
எம். ஆர். ஆர். வாசு
—நடித்த—

வீ ட் டு மாப்பிள்ளை



ராசி நல்ல ராசி உன்னை மாலையிட்ட மங்கை மகராசி.

மலரே நீ என் மலரல்ல......?

3வது வாரம்

செல்லமகால்
வின்சர் (யாழ் நகர்)




எஸ். வி. சுப்பையா,
சிவகுமார்,
கமலஹாசன்,
ஜெயசித்திரா,
ஸ்ரீ வித்தியா,
சுபா
ஜெயசுதா

திரைக்கதை, வசனம், டைரக்ஷன்:
கே. பாலசந்தர்.

நெல்சன் திருமலை

ராஜ ராஜ சோழன் (கலர்)

7வது வாரம்


கிங்ஸ்லி லிடோ (யாழ் நகர்)

சென்னையில் 100 நாட்களுக்கு மேல் ஓடி மக்களின் நன்மதிப்பை பெற்ற வண்ணச் சித்திரம்.

ஜெமினி, கே. ஆர். விஜயா, ராஜன்.
சௌகார் ஜானகி, முத்துராமன்.
நாகேஷ், சிவகுமார், சுந்தரராஜன்,
—நடித்த—

தேவரின்

தெய்வம்



(ஈஸ்ட்மென் கலர்)

4-வது வாரம்

கெப்பிட்டல் பிளாஸா
வெலிங்டன் (யாழ்நகர்)

ஸ்ரீகாந்த், பிரமிளா, நாகேஷ்,
குமாரி பானுமதி, சுந்தரராஜன்,
அசோகன், லக்ஷ்மி (பசு)

தேவரின்

கோமாதா என் குலமாதா

(ஈஸ்ட்மன் கலர்)

பனையே துணை

"என்னும் எழுத்தும் கண்ணெனத் தகும்"

எமது புதிய தயாரிப்பான நீம் வாசனை சோப் (வேப்பெண்ணெய் கலந்து) தற்பொழுது விற்பனையாகிக்கொண்டிருக்கிறது வாங்கிப் பாவித்து அதிக லாபம் அடையுங்கள். 2 நீம் வாசனை சோப் அல்லது 2 பார் சோப் அல்லது 15 மில்க்வைற் நீலசோப், மேலுறைகளை அனுப்பி 1 லாய்ப்பாடு மட்டை அல்லது நவீன முறையில் பனை வெல்லம் தயாரித்தல் என்னும் புத்தகத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம்
த. பெ. எண் 77, யாழ்ப்பாணம்.

# ஐ. நா. சபைமுன் கண்டன...

—1-ம் பக்கத் தொடர்

அண்மையில் கலாநிதி இராஜ ராஜேந்திரன் தலைமையில் நியூயார்க்கில் நடைபெற்ற அமெரிக்க தமிழ் பண்பாட்டுக் கழகக் கூட்டத்தில் மேற்கண்ட தீர்மானம் எடுக்கப்பட்டது. இக் கூட்டத்தில் கலந்துகொண்டவர்களில் பெரும்பான்மையோர் இந்திய மாணவர்கள் எனினும், அவர்களும் இத் தீர்மானத்திற்கு ஆதரவாக வாக்களித்தது குறிப்பிடத்தக்கது.

ஈழத்தமிழகம் பற்றி இக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட பிற தீர்மானங்கள் வருமாறு:-

(1) நியூயோர்க்கில் நிறுவப்படவிருக்கும் சைவக் கோவிலுக்கு அருகாமையில் தியாகி சிவகுமாரனின் வாழ்க்கை வரலாறு பொறித்த வெண்கலத் தூபியொன்று நிறுவப்படல் வேண்டும்.

(2) இலண்டனிலுள்ள ஈழத்தமிழக விடுதலை இயக்கம் தமிழ்ச் சங்கம், பாரிஸ் தமிழ்ச் சங்கம், அமெரிக்காவிலுள்ள ஈழத்தமிழகத்தின் விடுதலைக்கான அகில உலகத் தமிழர் இயக்கம், ஆகியனவற்றை ஒன்றிணைத்து 'ஈழத்தமிழகம்' சம்பந்தமாக இயங்குவதற்கு ஒரு பொது நடவடிக்கைக் குழுவை நிறுவுவதற்கான முயற்சிகளில் அமெரிக்க தமிழர் பண்பாட்டுக் கழகம் தாமதமின்றி ஈடுபடவேண்டும்.

(3) ஈழத் தமிழகத்தின் பொருளாதாரத் திட்டங்களுக்கு சகலவிதமான ஆதரவையும் தமிழர் பண்பாட்டுக் கழகம் அளித்திடும்.

(4) தமிழர் கூட்டணியின் நடவடிக்கைகளை தொடர்ந்து ஆதரிப்பதெனவும் கூட்டணிப் போராட்டங்களுக்கு சகலவித ஒத்துழைப்பையும் நல்குவதெனவும் அமெரிக்க தமிழ் பண்பாட்டுக் கழகம் தீர்மானிக்கிறது.

குறிப்பு: விசாரணையோ, விடுதலையோ இன்றி வெலிக்கடை, கண்டி, அநுராதபுரம் சிறைச்சாலைகளில் மாவை சேனாதிராசா, பொ. சத்தியசீலன், வண்ணை ஆனந்தன், சி. ர். பி. மணியம், நிசைவிரசிகோ, ஆகியோர் உட்பட 30 இளைஞர்கள் வரை இன்னும் வைக்கப்பட்டிருப்பது தெரிந்ததே.

மாவை சேனாதிராஜா
சிறையில் இன்று
718 நாள்!

## தனித் தமிழ்.......

—5-ம் பக்கத் தொடர்

உதுமா லெவ்வை, முன்னாள் மூதூர் உறுப்பினர் திரு. மு. மாணிக்கம், ஜனாப் மசூர் மவ்லானா, ஆகியோரும் உரையாற்றினர். (இவர்களது உரைகளின் சாராம்சம் அடுத்த வாரம் வெளிவரும்) பாண்டிருப்பு இளைஞர் பேரவை செயலாளர் திரு. மகேஸ்வரன் நன்றி கூறினார். திருமதி மங்கையர்க்கரசியின் தமிழ்த் தாய் வாழ்த்துடன் கூட்டம் முடிவடையும்போது இரவு மணி 11 ஆயினும் இதுவரை மக்கள் அசையாது இருந்து தலைவர்களின் பேச்சுக்களைக் கேட்டனர்.

## மானம் காத்த...

—1-ம் பக்கத் தொடர்

முயற்சியும் பிசுபிசுக்கவே—கொழும்பில் கல்வி அமைச்சுடன் தொடர்புகொண்டு கூட்டத்தை நிறுத்தும் தங்கள் சதியை நிறைவேற்றினர்.

சகல ஆயத்தங்களும் செய்யப்பட்ட பின்னர் இப்படி இனத்துரோகிகளின் சதியால் கூட்டம் நிறுத்தப்பட்டதை அறிந்த மாணவ மாணவியர்கள் கொதித்தெழுந்தனர். இது அநியாயம், அக்கிரமம் என்று கூக்குரல் எழுப்பிக்கொண்டே கல்லூரியை விட்டு வெளியேறினர்.

வெளியேறிய கிரமாணவர் கூட்டம், கல்லூரிக்கு வெளியேயுள்ள ஒரு பொது இடத்தில் பெருந்திரளாகக் கூடி கள் ஆனந்தக் கண்ணீர் சொரிந்து கட்டித் தழுவி வரவேற்று—பொற்கிழியும் வழங்கி, கவி

## உதயசூரியன் கொடி..

—7-ம் பக்கத் தொடர்

திருவாளர்கள் மு. திருச்செல்வம் கியூ. சி, எம். எஸ். செல்லச்சாமி ஆகியோருட்பட பெருந்தொகையானோர் பார்வையாளர் கலரிகளில் நிறைந்திருந்தனர். கலரி நிரம்பி வழிந்தது.

மூதறிஞர் செல்வா உறுதிமொழியெடுத்த பின்னர், எதிர்க்கட்சியின் சார்பில் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவும், அரசாங்கக்கட்சியின் சார்பில் அமைச்சர் பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயகாவும் அவரை வரவேற்றுப் பேசிய போது சபை அதிரும்படி கரவொலியெழுந்தது.

ஞரது உரையைக் கேட்டு மகிழ்ந்தனர்!

தமிழ்விரோதிகளின் மூகத்தில் கரிபூசி தமிழ் வீரத்தை நிலை நாட்டிய [illegible] மாணவ மாணவியரின் [illegible] வையும், தமிழ் [illegible] பாராட்டுகிறேம்.

இப்பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிடெட் ஸ்தாபனத், தாரால் கொழும்பு பண்டாரநாயகா மாவத்தை 191 ஏ. இலக்கத்தில் 1975ம் வருடம் பெப்ரவரி மாதம் 23-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org